Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No.21/2023**

**Deposition of PW.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகேந்திரன் | ஜாதி | : | |
| த/பெ | : | சடையாண்டி | தொழில் | : | உதவி இயக்குநர், வேளாண்மை துறை, வத்தலகுண்டு. |
| கிராமம் | : | அய்யம்பாளையம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 44/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.05.2025.

(3 முதல் 5 எதிரிகள் ஆஜர். 1வது மற்றும் 2வது எதிரிகள் ஆஜர் இல்லை, கு.வி.மு.ச பிரிவு 317 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை

நான் தற்பொழுது வத்தலகுண்டில் உள்ள வேளாண்மை துறையில் உதவி இயக்குநராக வேலை பார்த்துகொண்டு வருகிறேன். இவ்வழக்கில் கடந்த 08.09.2022 ஆம் தேதி எனது தரப்பில் அளித்த முதல் விசாரணையை இவ்வழக்கில் முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்கிறேன். ஏற்கனவே 08.09.2022 அன்று புகார்தாரர் தரப்பு சான்று ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ள பு.த.சா.ஆ.1 முதல் 20 வரையிலான ஆவணங்களை இந்த முதல் விசாரணையில் மீண்டும் புகார் தாரர் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நீங்கள் இந்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு தங்களது துணை இயக்குநர் அவர்களிடம் அனுமதி பெறவேண்டும் என்றால் வாங்கவேண்டியதில்லை. உங்களது துணை இயக்குநரிடம் அனுமதி பெறவேண்டும், அவ்வாறு அனுமதி பெறாமல் நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் எதிரிக்கு அனுப்பியுள்ள விளக்க கடிதத்தில் உங்களுடைய கையொப்பமும், உங்களது துணை இயக்குநர் கையொப்பமும் இடம் பெற்றுள்ளது என்றால் சரியல்ல, துணை இயக்குநர் கையொப்பம் மட்டும் தான் உள்ளது. நீங்கள் பகுப்பாய்வின் அறிக்கையை பெற்ற பிறகு எத்தனை எத்தனை நாட்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்தீர்கள் என்றால் 11 மாதம் 17 நாட்கள் கழித்து தாக்கல் செய்தேன். மேற்சொன்ன காலதாமதத்திற்கு ஏதேனும் குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு விளக்கம் கேட்டிருந்தேன், அவர்கள் பதில் அனுப்புவதற்கு காலதாமதம் ஆகிவிட்டது. எந்த தேதியில் நீங்கள் விளக்கம் கேட்டீர்கள் என்றால் 30.09.2019 இல் பகுப்பாய்வு அறிக்கை பெற்றேன். அன்றையதினமே விளக்கம் கேட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளேன்.

விளக்கம் கிடைக்காததால் 07.02.2020 இல் மீண்டும் ஒரு கடிதத்தை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு விளக்கம் கேட்டு அனுப்பியிருந்தேன். மேற்சொன்ன இரண்டு தேதிகளிலும் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு விளக்கம் கேட்டு நீங்கள் அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சலக ரசிது மற்றும் அதனை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை ஆகியவற்றை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விளக்க கடிதம் கோரி எந்த ஒரு அறிவிப்பும் முறையாக கொடுக்காமல், நீங்கள் உங்களது அலுவலகத்தில் வைத்து தயால் செய்த விளக்க கடிதத்தை இந்த எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் இந்த புகாரை தாக்கல் செய்யும்போது அந்த விதைகள் காலாவதியாகிவிட்டது என்றால் சரியல்ல, மறு பகுப்பாய்விற்கு அனுப்பினால் தான் தெரியவரும். அந்த விதை எந்த தேதியில் காலாவதி ஆகியது என்றால் 11.03.2020 ஆம் தேதி காலாவதியாகியது. நீங்கள் எதிரிகளுக்கு எதிராக புகாரை தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு தான் விதைகளை மத்திய பகுப்பாய்வு நிறுவனத்திற்கு அனுப்புவதற்கான உரிமையை எதிரிகள் சட்டப்படி பெறமுடியும் என்றால் சரியல்ல, Seed control Act இன் படி மறு பகுப்பாய்விற்கு அனுப்பப்பட வேண்டியதில்லை. Seed control Act இன் படி மறு பகுப்பாய்விற்கு அனுப்ப வேண்டியதில்லை என்று எந்த பிரிவு கூறுகிறது என்றால் Clause 13(c) கூறுகிறது. உங்களுக்கு 1 ஆம் எதிரி எந்த தேதியில் பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றால் 12.06.2020 அன்று எங்களுக்கு கிடைக்கக்பெற்றது. நீங்கள் அனுப்பிய 13.05.2020 அன்றைய விளக்க கடிதத்திற்கு கடந்த 13.05.2020 ஆம் தேதிய விளக்க கடிதத்தை 1ஆம் எதிரி 16.05.2020 ஆம் தேதியும், பின்பு 19.07.2020 ஆம் தேதியும் விளக்க கடிதம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. உங்களிடம் காட்டப்படும் அஞ்சலக உறையானது நீங்கள் 3 மற்றும் 4 எதிரிகளுக்கு அனுப்பிய அஞ்சல உறை என்றால் சரிதான். அந்த அஞ்சலக உறையில் நீங்கள் அனுப்பிய தேதி 06.05.2020 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

1 ஆம் எதிரி அனுப்பிய விளக்க கடிதத்தில், தெலுங்கான அரசு விதைகள் மேம்பாட்டு நிறுவனத்தில் பகுப்பய்வு செய்த அறிக்கையும் சேர்த்து தான் அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல, விளக்கம் மட்டும் தான் எனக்கு வந்தது. உங்களுக்கு 1 ஆம் எதிரி அனுப்பிய விளக்கக் கடிதத்துடன், பகுப்பாய்வு அறிக்கையும் சேர்த்து தான் வந்தது என்றும், அந்த விளக்க கடிதத்திலேயே பகுப்பய்வு அறிக்கை குறித்த விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விளக்க கடிதம் (<u>எ.ம.சா.ஆ.5/PW1)</u> ஆக குறியீடு செய்யப்படுகிறது. **<u>(23.05.2024</u>** <u>அன்று புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்யும்போது குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு சான்று ஆவணங்களாக **1** முதல் **4** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது</u>**) .** தெலுங்கான மாநில அரசங்கத்துடைய பகுப்பய்வு அறிக்கையில் முளைப்புத்திறன் சரியாக உள்ளது என்று அறிக்கை அனுப்பப்பட பின்பும், நீங்கள் உங்கள் வசம் உள்ள விதைகளை மத்திய பகுப்பய்வு நிறுவனத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல, Seed control orders இன் படி வேறு மாநில பகுப்பய்வு அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறப்பட்டுள்ளது. எந்த பிரிவின் கீழ் மேற்சொன்ன வாறு கூறப்பட்டுள்ளது என்றால் Clause 13(c) இல் கூறப்பட்டுள்ளது.

புகாரில் சொல்லியுள்ளபடி 4ஆம் எதிரியின் நிறுவனத்திக்கு நேரில் சென்று நீங்கள் எந்த ஆய்வையும் மேற்கொள்ளவில்லை என்றும், உங்கள் அலுவலகத்தில் வைத்து தயார் செய்த ஆவணங்களை வைத்து எதிரிகளுக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஏற்கனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. இந்த நீதிமன்றத்தில் தவறான ஆவணங்களையும், சாட்சியத்தையும் அளித்திருந்தால் சட்டப்படி நீங்களும் தண்டிக்கப்பட வேண்டியவர் என்றால் நான் தவறான ஆவணங்களை சமர்பிக்கவில்லை, உண்மையான ஆவணங்களை தான் சமர்பித்துள்ளேன், சாட்சியமும் உண்மையாக தான் அளித்துள்ளேன்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate,
Athoor.